# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 15 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழ் மொழியில் உள்ள உயிர்மெய் எழுத்துகள்

அ) 247 ஆ) 216 இ) 30 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கயிலைவன்னியனுடன் நட்புப் பூண்டிருந்த கண்டி மன்னன்

அ) எல்லாளன் ஆ) தேவநம்பியதீசன்

இ) இரண்டாம் இராசசிங்கன் ஈ) செகராசசேகரன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. ஈட்டல் என்பதன் எதிர்ச்சொல்

அ) இழத்தல் ஆ) கொடுத்தல்

இ) எடுத்தல் ஈ) வைத்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) மேலேமேலே ஆ) பென்னம்பெரிய இ) நேர்நேர் ஈ) விறுவிறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ஒழுக்கமில்லாதவனிடம் ______________ இருக்காது. என வள்ளுவர் கூறுகிறார்.

அ) கல்வி ஆ) உயர்வு இ) ஆக்கம் ஈ) செல்வம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. சேந்தன் நேற்றுப் பள்ளிக்குச் சென்றான். இச் சொல்லியம்

அ) வினா ஆ) ஏவல் இ) மெய்ப்பாடு ஈ) கூற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. **பழமொழி:** இரக்கப் போனாலும் ______________ப் போ

அ) சிரக்க ஆ) சிறக்க இ) சினக்க ஈ) சிறுக்க

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. யாழ்ப்பாண அரசு வலிமை பெற்று இருந்த நூற்றாண்டு

அ) பதின்னான்கு ஆ) பதினைந்து இ) பதினேழு ஈ) பதின்மூன்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம் ____________ எழுத்துப் போலாகும்

அ) கல் மேல் ஆ) நீர் மேல் இ) மண் மேல் ஈ) நிலம் மேல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சினங்காத்தல் பற்றி திருவள்ளுவர் எழுதியுள்ள அதிகாரம்

அ) வெகுளாமை ஆ) கல்லாமை இ) கொல்லாமை ஈ) கள்ளாமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. போர்க்காலத்தில் கொட்டும் முரசு

அ) கொடை முரசு ஆ) போர் முரசு இ) மண முரசு ஈ) பறை முரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தலைவனுக்குத் தலைவி போல் உழவனுக்கு ____________

அ) உழவி ஆ) உழச்சி இ) உளத்தி ஈ) உழத்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பாடுதல் என்பது

அ) சினைப்பெயர் ஆ) காலப்பெயர் இ) தொழிற்பெயர் ஈ) பொருட்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இலக்கிய இன்பம் என்ற பாடத்தில் இஞ்சியும் மஞ்சளும் வேலியாக இருப்பது

அ) வயலுக்கு ஆ) ஆற்றுக்கு இ) குளத்துக்கு ஈ) கடலுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. விபுலாநந்த அடிகள் எழுதிய நூல்களில் ஒன்று

அ) நன்னெறி ஆ) யாழ்நூல் இ) புறநானூறு ஈ) நாலடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. சேரன் கவிதையை வாசித்து முடித்தான். இதில் வாசித்து என்பது,

அ) பெயரெச்சம் ஆ) வினைமுற்று இ) வினையடி ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. குடும்ப விளக்கு என்ற நூலை எழுதியவர்.

அ) பாவேந்தர் ஆ) பாரதியார் இ) திருவள்ளுவர் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. போலிப் பெருமையைக் குறிக்கும் பழமொழி

அ) விளையும் பயிரை முளையிலே தெரியும்

ஆ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்

இ) மனமுண்டானால் இடமுண்டு

ஈ) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பின்வருவனவற்றுள் குடிமக்கள் காப்பியம் எனப்படுவது.

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) வளையாபதி ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. சங்கவி பாலைக் குடித்தாள். இதில் வந்துள்ள வேற்றுமை உருபு

அ) ஆல் ஆ) ஐ இ) கு ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. புல்லாங்குழல்

அ) தோற்கருவி ஆ) கஞ்சக்கருவி இ) நரம்புக்கருவி ஈ) துளைக்கருவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மட்பாண்டம் என்பதைப் பிரித்தால்

அ) மண் + பாண்டம் ஆ) மட் + பாண்டம்

இ) மட்ப் + பாண்டம் ஈ) மண்ப் + பாண்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. உழுது பயிர் விளைவித்து உலகிற்குக் கொடுப்பவர்

அ) வேந்தர் ஆ) காராளர் இ) புலவர் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. நாங்கள் நேற்று விளையாடினோம். நாளை

அ) விளையாடுவீர்கள் ஆ) விளையாடுவோம்

இ) விளையாடுவார்கள் ஈ) விளையாடுகின்றோம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மருதுபாண்டியன் பிறந்த ஊர்.

அ) உமையாபுரம் ஆ) விழுப்புரம் இ) தோமையாபுரம் ஈ) உருத்திரபுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. ஒரு சொல்லியத்தில் கருத்து முற்றுப்பெற்று நிற்கும் இடம்.

அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தும்பை மலர் நீர் வீழ்ச்சித் தாடி; நெடுநல்மேனி இந்த உருவம்

அ) பாவேந்தர் ஆ) சின்னத்தம்பிப்புலவர்

இ) பாரதியார் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பங்கம் என்ற சொல் குறித்து நிற்பது

அ) வயல் ஆ) சேறு இ) எருமை ஈ) சுறா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இடையன் என்ற சொல்லின் பெண்பாற் சொல்

அ) இடைச்சி ஆ) இடச்சி இ) இடைய்சி ஈ) இடத்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இலக்கிய இன்பம் என்ற பாடலில் உழவர்கள் உழும்போது சேற்றில் மிதப்பவை

அ) கற்கள் ஆ) சங்குகள் இ) இளநீர்கள் ஈ) தடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. அழகுக்கலைகள் என்று அழைக்கப்படுபவை எவை?

2. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப்பகுதியின் பெயர் என்ன?

3. சினங்காத்தலை ஔவையார் இரு சொற்களில் எவ்வாறு கூறுகிறார்?

4. பூநகரிப் பகுதி அகழ்வாய்வில் எந்தெந்த நாட்டுக் காசுகள் காணப்பட்டன?

5. இலக்கிய இன்பம் என்ற பாடத்தில் வயலோரத்து மேடுகளில் எவை நிறைந்து காணப்படுகின்றன?

6. கத்தரித் தோட்டத்துக் காவலன் எவ்வாறு வேலை செய்கின்றான்?

7. ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்றும் எவை?

புள்ளிகள் 10

3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழு விடை தருக.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழிக்கு இணங்கக் கடலெங்கும் கப்பல் விட்டுச் சீருஞ்சிறப்புடன் வாழ்ந்தது தமிழினம். ஆரியர் திட்டமிட்டுப் பரப்பிய மூட நம்பிக்கைகளில் மூழ்கிப் போனது இந்தத் தமிழினம். அம் மூட நம்பிக்கைகளை உண்மை என நம்பியது. தான் ஆரியர்களை விடத் தாழ்ந்தது என எண்ணியது. உலகெங்கும் கூலிகளாகச் சென்றது. இக்காலகட்டத்தில் அறியாமை இருளில் இருந்த தமிழினத்திற்கு ஒளி வீசும் விடி வெள்ளியாகத் தோன்றினார் 'பெரியார்' என்று சிறப்பாக அழைக்கப்படும் ஈ.வே.ராமசாமி. ஆரியரால் மொழி இழந்து, கலை இழந்து கிடந்த தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பினார். மூட நம்பிக்கைகள் பொய்யானவை என்பதைப் புரிய வைத்தார். தமிழர்களின் முன்னைய சிறப்புகளை எடுத்துக்காட்டினார். 'திராவிடர் கழகம்' என்ற ஒரு கழகத்தை அமைத்தார். மூடநம்பிக்கைகளில் இருந்து மக்களை மீட்டெடுத்தார். தமிழ் மக்களின் உயர்வுக்காகப் போராடினார்.

1. அறியாமை இருளில் இருந்த தமிழினத்திற்கு ஒளி வீசும் விடி வெள்ளியாகத் தோன்றியவர் யார்?

______________________________

______________________________

2. ஆரியர் திட்டமிட்டுப் பரப்பியவை எவை?

______________________________

______________________________

3. பெரியார் உருவாக்கிய கழகத்தின் பெயர் என்ன?

______________________________

______________________________

4. இங்கு வந்துள்ள பழமொழி யாது?

______________________________

______________________________

5. கடலெங்கும் கப்பல் விட்டுச் சீருஞ்சிறப்புடன் வாழ்ந்த இனம் எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 4) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. வினாச்சொல்லியம், கூற்றுச்சொல்லியம் ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

2. சுட்டெழுத்துகள் எவை? அவற்றுள் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

3. வினைமுற்று வினையெச்சம், பெயரெச்சம் ஒவ்வொன்றுக்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

| வினைமுற்று | வினையெச்சம் | பெயரெச்சம் |
|---|---|---|
| | | |
| | | |

4. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பாற் சொற்களைத் தருக.

நடிகை ______________ தலைவி ______________

சிறுவன் ______________ செல்வன் ______________

குறவன் ______________ தாய் ______________

5. பின்வரும் புணர்ச்சி வகைகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

தோன்றல் ______________

திரிதல் ______________

கெடுதல் ______________

புள்ளிகள் 15

5) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

*வானத்து விண்மீன் போல் மின்னும்*
*வைர மோதிரம் அணிவாரே*
*வற்றா அழகு சேர்ந்திட*
*வைர மாலை அணிவாரே*

*வைரம் வந்த வரலாற்றை*
*வண்ணக்கிளியே அறிவாயோ?*
*பூமியில் புதைந்த நிலக்கரியே*
*பொன்னார் வைரம் ஆகியது.*

*கழுத்தில் விரலில் நாமணிந்து*
*களிக்கும் நகையாய் மாறியது.*
*மின்னும் வைரம் கற்களிலே*
*மிகவும் திண்மை உடையதுவாம்.*

*வைர நகைகள் இல்லையென்றே*
*வாட்டம் சிறிதும் கொள்ளாதே*
*வைரம் போலும் நெஞ்சிருந்தால்*
*வாழ்வில் துன்பம் நில்லாதே*

1. கற்களிலே மிகவும் திண்மை உடையது எது?

______________________________

2. வைரம் எதைப் போல் மின்னுகிறது எனக் கூறப்படுகிறது?

______________________________

3. பொன்னார் வைரமாக மாறியது எது?

______________________________

4. எது இல்லை என்று வாட்டம் சிறிதும் கொள்ள வேண்டாம் எனக் கூறுகின்றார்?

______________________________

5. எது இருந்தால் வாழ்வில் துன்பம் நில்லாது?

______________________________

புள்ளிகள் 10

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Maren wird mit seinen Eltern in den Park gehen. Dort wird er mit seinen Freunden gemeinsam spielen. Zu seinen Lieblingsspielen gehören Ballspiele. Sport ist eine sehr gute Übung für den Körper. Dadurch wird der Körper gestärkt.

Maaran gaat naar het park met zijn ouders. Hij speelt daar met zijn vrienden. Hij vindt het leuk om met de bal te spelen. Bewegen is goed voor het lichaam. Door te bewegen wordt het lichaam sterker.

Maran va con i genitori al parco. Li' gioca con i suoi amici. Il suo gioco preferito è il calcio. Il gioco è il migliore modo per fare ginnastica. Per questo il corpo è sano.

Maran tager til blomsterparken med sine forældre. Der leger han med sine venner. Hans bedste sport er fodbold. At lege er en god motion. Den giver kroppen styrke.

Maran går till trädgården med sina föräldrar. Där leker han med sina kompisar. Hans favoritlek är att spela fotboll. Leken är en bra kroppsträning. Så kroppen kommer att vara starkt.

Maran va au parc avec ses parents, où il joue avec ses amis. Son jeu préféré est le foot ball. Jouer est un bon moyen pour exercer notre coprs. Cela permet de le renforcer le corps.

Maran goes to the park with his parents. There he plays with his friends. Football is his favourite game. Play is a very good exercise.
It strengthens the body.

Maren pleier å gå til park samen med foreldrene. På parken pleier han å leke sammen med vennene sine. Han liker å sprake ball. Sport er godt trenging og kroppen blir sterk.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- சினங்காத்தல்
- தமிழர் திருநாட்கள்
- நாமும் எமது பெற்றோரும்

புள்ளிகள் 20